# பணிநிறைவுப் பாராட்டு

திருமிகு **S பகவதி பெருமாள் பிள்ளை** (30-04-2020)



தங்கத்தமிழ்போலே தளராதச் சொல்லுடையோன்!
வங்கக் கடல் பேச வாழ்க்கையைத் தொடங்கியவன்!
சிங்கக் குரலெடுக்கும் சிங்காரத் தமிழனவன்!
எங்கள் சுங்கத்தின் இணையில்லாப் பெருமகனாம்!

மங்காப் புகழ் கொண்டு மருவிலாது பலர்வாழ்ந்த,
எங்கள் தமிழ் மகனார் எழும்பியக் குமரிமுனை;
தங்கத் திருநாட்டின் தனித்த அடையாளம்!
எங்கள் தமிழுக்கும் இருக்கும் ஓர் அடையாளம்!

கடல் கொண்ட தென்னாட்டில் கருப்புச் சரித்திரத்தில்
விடைகொண்டு எம்மோடு விளையாடும் தமிழ் மண்தான்,
படைகொண்ட முக்கடலின் பார்வைக்கு ஓர் அழகாம்!
அடையாளம் தருவது போல் அழகுத் தமிழுண்டு!

கடல் தாண்டிய ஈழத்தின் கன்னித் தமிழ் வீச்சு,
மடையென்று தமிழுந்தான் மணம்கொண்டு கமழ்ந்தாலும்,
நடைத்தமிழை நானிலத்தார்; கோவைக்குக் கொஞ்சுதமிழ்!
படைகொண்ட சோழநாட்டின் செவ்வியச்சீர் செந்தமிழ்!

வீரத்தின் விளையகமாம் நெல்லையின் அழகுத்தமிழ்!
பாமராய்ச் சிலசமயம் பார்வைத் தரும் சென்னைத் தமிழ்!
சீராய்த் தமிழ் வளர்த்த சிங்காரமான மதுரைத் தமிழ்!
ஆராரோ பாடி எழும் அழகுநிகர் குமரித்தமிழ்!

சங்கத் தமிழதுவை எங்கள் சுங்கத்திலும் பாடிய குயில்!
தங்கநிகர் மாமணிதர் எங்கள் **பிள்ளை**யவர்!
பொங்கும் தமிழ் வழக்கில் **பகவதி பெருமாள் பிள்ளை!**
எங்கள் மனங்களிலே என்றும் நீங்காப் **பிள்ளை!**

மேவிய வாழ்க்கைப் படகினிலே அழகாய் இருமக்கள்!
காவியச் செல்வன்சீர் **சிவசுப்பிரமணிய பிள்ளை**யுடன்,
ஓவியத் தமிழாக உருவெடுத்த இளையள் மகள் **பவித்ரா**!
தாவிய மானாகத் தடம் பதித்தக் காலங்கள்!

அத்துனை நிலைகளிலும் எங்கள் அன்பின் இலக்கணம்!
சொத்தாகச் சுங்கத் தமிழுக்கும் தோள் கொடுத்தார்!
பித்தான அன்புடனே பிரியமாய் நிறைந்திருந்தார்!
தத்தையென சுங்கப் பணிக்குழுமம் சேர்ந்திருந்தார்!

பணிநிறைவு காணுகின்றார் எங்கள் **பிள்ளை!**
பிணியில்லா வாழ்வு கொள்ள பெருமகன் அருளட்டும்!
மணியான பலகோயில் சென்றுவரும் சீராளன்!
மணியான பிள்ளைகளுடன் எந்நாளும் வாழ்க நிறைந்து!

அன்புடன், **கு.ப. அசோகன்.**

**21-04-2020**

************